சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "இது கதிர்வேலன் காதல்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

7046

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண். 90

நாள். 26.02.2014
விஜய, மாசி, 14
திருவள்ளுவர் ஆண்டு, 2045

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணை எண்.3203/2014, நாள் 20.2.2014.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/3644/2014, நாள் 24.02.2014 தேர்வுக்குழு எண். 133/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரித்த "இது கதிர்வேலன் காதல்" திரைப்படத்தை பார்வையிட்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் வரி விலக்களிக்க பரிந்துரை செய்ய ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றினை அமைத்திட வேண்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற்படி நிறுவனத்தின்

சார்பில் தொடரப்பட்ட W.P.No.3203/2014 மற்றும் M.P.No.1 மற்றும் 2 / 2014–ன்படி வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் தனது 20.2.2014 நாளிட்ட தீர்ப்பாணையில், மேற்படி திரைப்படத்தினை 22.2.2014–ல் தற்போதுள்ள தேர்வுக் குழு பார்வையிட வேண்டும் என்றும், அக்குழுவின் பரிந்துரைகளை மனுதாரருக்கு 24.2.2014–க்குள் அளித்திட வேண்டுமென்றும், அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பரிந்துரை பெறப்பட்ட இரண்டு நாட்களுக்குள் அரசு இறுதியாணை பிறப்பிக்க வேண்டுமென்றும் ஆணையிட்டது.

3. அதனடிப்படையில், முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தனது 21.2.2014 நாளிட்ட செயல் முறை ஆணையில் கீழ்கண்ட தேர்வுக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணையிட்டார்:–

| தேர்வுக்குழுவின் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் | | |
|---|---|---|
| வ.எண். | துறையின் பெயர் | உறுப்பினர்களின் பெயர்/ பதவி (திருவாளர்கள்) |
| 1 | வணிகவரித் துறை | M.பரமேஸ்வரன், இணை ஆணையர் (வவ) சென்னை (மையம்) கோட்டம், சென்னை–6. |
| 2 | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை | வே.கூழுச்சாமி, துணைச் செயலாளர். |
| 3 | தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8. | முனைவர். கா.மு.சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி இயக்குநர். |

| தேர்வுக் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்கள் | | |
|---|---|---|
| வ.எண். | உறுப்பினர் பெயர் | (திருவாளர்கள்) |
| 1. | V.S.ராகவன், | பழம்பெரும் நடிகர் |
| 2. | A.L.ராகவன், | பழம்பெரும் பின்னணிப் பாடகர் |
| 3. | M.N.ராஜம், | பழம்பெரும் நடிகை |
| 4. | ராஜஸ்ரீ, | பழம்பெரும் நடிகை |

மேற்காணும் தேர்வுக் குழுவில் உள்ள அலுவல் சார்ந்த உறுப்பினர் முனைவர், கா.மு.சேகர், இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை அவர்களை தவிர இதர ஆறு உறுப்பினர்களும், "இது கதிர்வேலன் காதல்" என்ற திரைப்படத்தை 22.02.2014 அன்று பார்வையிட்டுள்ளதாக தெரிவித்தார்.

4. மேற்கண்ட தேர்வுக்குழுவின் பரிந்துரைகள் மனுதாரருக்கு 24.2.2014 அன்று வணிகவரி ஆணையரால் வழங்கப்பட்டது என்றும் மேலும், வணிகவரி ஆணையர் தனது கடிதத்தில் தேர்வுக்குழுவின் பரிந்துரைகளை 24.2.2014 அன்று அரசுக்கு அளித்துள்ளதோடு "இது கதிர்வேலன் காதல்" திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், இரண்டு உறுப்பினர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு பெற

தகுதியானது அல்ல எனவும், நான்கு உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு வழங்கலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, "இது கதிர்வேலன் காதல்" தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கலாம் என்று முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/2/2014
பிரிவு அலுவலர்.
26.2.14